**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.II, SANKARI**

**MC No.02/2022 Date: 28-06-2023.**

ம.சா.1 – மதுபாலா, க/பெ.ஜெயகாந்தன்,

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி-

1) எனது பிரமாண பத்திரிக்கையில் பாரா 16ல் எனக்கு உடல்நிலை சரியில்லாமல் போனது என சொல்லும்போது எந்த மருத்துவமனைக்கு நான் சிகிச்சைக்காக சென்றேன் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் என்னை விவாகரத்து அறிவிப்பு அனுப்பிவிடுவேன் என மிரட்டினார் என்று நான் சொல்லும்போது எந்த தேதியில் மிரட்டினார் என்று குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் சொன்னவாறு சம்பவம் நடந்திருந்தால் எந்த மருத்தவமனையில் சிகிச்சை பெற்றேன் என்றும், எந்த தேதியில் எதிர்மனுதாரர் மிரட்டினார் என்றும் எனது பிரமாண பத்திரிக்கையில் குறிப்பிட்டிருப்பேன் என்றும், அவ்வாறு நடக்காததால் தான் குறிப்பிடவில்லை என்று சொன்னால் சரியல்ல.

2) எனது பெற்றோருக்கு ஆண் வாரிசு இல்லை என்று சொன்னால் சரிதான். எனது அப்பாவிற்கு சொந்த வீடு உள்ளதா என்றால் உள்ளது. எனது அப்பா மளிகை கடை வைத்து தொழில் செய்து வருகிறாரா என்றால் இல்லை, காகாபாளையத்தில் உள்ள ரமணி மளிகை கடையில் வேலை பார்த்து வருகிறார். எனது அப்பா சொந்தமாக ரமணி மளிகை கடை வைத்து தொழில் செய்து வருகிறார் என்று சொன்னால் சரியல்ல. நான் வேலைக்கு சென்று ரூ.12,000/- மாதம் சம்பாதித்து வருகிறேனா என்றால் இல்லை, ரூ.6000/-ம் தான் சம்பளம் வாங்கி வருகிறேன்.

3) நான் ரூ.12,000/- சம்பளம் வாங்கிறேன் என்றும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. நான் வேலை பார்க்கும் பள்ளியில் இருந்து குவிமுச 91ன் கீழ் மனு தாக்கல் செய்து எனது சம்பளம் குறித்த ஆவணங்களை ஆஜர் செய்ய எனக்கு ஆட்சேபணை இல்லை என்றால் சரிதான். எனது தங்கைக்கு திருமணம் ஆகிவிட்டது என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு சொந்தமான வீட்டை நான் வாடகைக்கு விட்டுள்ளேன் என்றால் இல்லை, எனது தாத்தா, பாட்டி அங்கு வசித்து வருகிறார்கள். நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், எனது அப்பாவின் வீட்டை வாடகைக்கு விட்டுள்ளேன் என்றும் சொன்னால் சரியல்ல.

4) நான் பாரா 17ல் சொன்ன சங்கதிகள் உண்மைக்கு புறம்பானவை என்றும், வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. என்னை எதிர்மனுதாரர் 29-07-2019ம் தேதி அடித்து கொடுமைபடுத்தினார் என காவல்

நிலையத்தில் புகாரோ அல்லது சொந்த காரர்களிடம் சொல்லவில்லை என்றால் சரிதான். நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், நான் சொன்னவாறு சம்பவம் நடைபெறவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. நான் எதிர்மனுதாரருடன் வாழாமல் இருப்பதால் தான் எதிர்மனுதாரர் விவாகரத்து மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல, நான் வாழ தயாராக தான் உள்ளேன்.

5) நான் சங்ககிரி சார்பு நீதிமன்றத்தில் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த வழக்கில் எனது ஆதரவாக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த உத்தரவிற்கு பிறகு நான் சேர்ந்து வாழ முயற்சி எடுத்தேனா என்றால் எதிர்மனுதாரர் வேறொரு திருமணம் செய்துவிட்டதால் முயற்சி எதுவும் செய்யவில்லை. நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றும், நான் சொன்னவாறு எதிர்மனுதாரர் வேறொரு திருமணம் எதுவும் செய்துகொள்ளவில்லை என்றும் சொன்னால் சரியல்ல. காகாபாளையத்தை சேர்ந்த எனது தந்தையின் நண்பரான அம்சவேல் என்னையும், எதிர்மனுதாரரையும் சேர்த்து வைக்க முயற்சி எடுத்தார் என்றால் சரியல்ல.

6) காகாபாளையத்தை சேர்ந்த எனது தந்தையின் நண்பரான அம்சவேல் என்னையும், எதிர்மனுதாரரையும் சேர்த்து வைக்க முயற்சி எடுத்தார் எனவும், நான் தான் எதிர்மனுதாரருடன் சேர்ந்து வாழ முயற்சி எடுக்கவில்லை என்றால் சரியல்ல. நான் எனது பிரமாண பத்திரிக்கையில் பாரா 19ல் குறிப்பிட்டுள்ளவாறு எதிர்மனுதாரர் , மீனா கிருஷ்ணா என்பவரை திருமணம் செய்து விட்டார் என்பதற்கு ஆதாரமாக புகைப்படம், யார் யார் சென்றார்கள் போன்ற விவரத்தினை நான் தெரிவித்துள்ளேனா என்றால் நான் அவர்கள் மீது தொடுத்துள்ள குற்ற வழக்கு எண்.73/2021 ல் குறிப்பிட்டுள்ளேன், இவ்வழக்கில் குறிப்பிடவில்லை.

7) நான் காவல் நிலையத்தில் கொடுத்த புகாரில் என்ன நடவடிக்கை எடுத்தார்கள் என்று தெரிந்துகொண்டேனா என்றால் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்க சொன்னார்கள். 30-09-2018ம் மீனாகிருஷ்ணா காவல் நிலையம் ஆஜராகி நான் தனியாக வசித்து வருவதாக வாக்குமூலம் கொடுத்துள்ளார் என்றால் சரியல்ல, பொய்யாக கொடுத்துள்ளார். நடக்காத ஒரு சம்பவத்திற்காக ஆவணம் இல்லாமல் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது பிரமாண பத்திரிக்கையில் பாரா 20ல் குறிப்பிட்டுள்ள சங்கிதிகள் தவறு எனவும், என்னையும், குழந்தையையும் நானே பராமரித்து கொள்வேன் என்றும் சொன்னால் சரியல்ல.

8) எனது மகனுக்கு நான் பள்ளிக்கட்டணம் செலுத்தி வருகிறேன் என்றால் சரிதான். எனது மகனுக்கு வருட பள்ளிக்கட்டணம் எவ்வளவு என்றால் நான் வேலை பார்த்து வரும் பள்ளி என்பதால் ரூ.50,000/- சலுகை கட்டணம் வசூலிக்கப்படுகிறது. நான் வசதியாக

இருப்பதால் தான் பணத்தை கட்ட முடிகிறது என்றால் இல்லை, நான் வேலை பார்ப்பதால் கொஞ்சம் கொஞ்சமாக கட்டி வருகிறேன். எதிர்மனுதாரர் எவ்வளவு சம்பளம் வாங்குகிறார் என்பதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்யவில்லை, ஆனால் அது குறித்து குறிப்பிட்டுள்ளேன்.

9) எதிர்மனுதாரருக்கு விவசாய நிலம் உள்ளதாக நான் சொல்லும்போது அதனுடைய சர்வே எண்ணை நான் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. நான் எனது பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ள அனைத்து பத்தியில் உள்ள சங்கதிகளும் தவறு என்றும், நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் எனது பிரமாண பத்திரிக்கையில் பாரா 23ல் குறிப்பிட்டுள்ளவாறு எதிர்மனுதாரர் SKS மருத்துவமனை சேலத்தில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்றால் சரிதான்.

10) எதிர்மனுதாரருக்கு ரூ.50,000/- தொகையை கொடுத்ததாக சொல்லும்போது யார் மூலம் கொடுத்தேன் என்று எனது பிரமாண பத்திரிக்கையில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. எதிர்மனுதாரர் வேலைக்கு செல்ல முடியாமல் மருத்துவமனை சிகிச்சை எடுத்து கொண்டு கஷ்ட ஜீவனாம்சம் செய்து வருகிறார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் குடிபழக்கத்திற்கு அடிமையானதால் அதற்கு சிகிச்சை பெற Life recovery foundation சீகிச்சை எடுத்து வந்தார் என்றும், நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

11) எதிர்மனுதாரர் எனக்கும், எனது மகனுக்கும் தலா ரூ.25,000/- தொகையை கொடுக்க கடமைப்பட்டவர் என்று சொல்வது அதிகம் என்று சொன்னால் சரியல்ல, அவரால் கொடுக்க முடியும். நான் வேறொருவரை திருமணம் செய்து கொண்டு வாழ்ந்து வருவதால் எதிர்மனுதாரரின் மீது பொய்யான ஒரு வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரருடன் நான் சேர்ந்து வாழ தயாராக உள்ளேனா என்றால் 2 வது திருமணம் செய்துகொண்ட எதிர்மனுதாரருடன் எனக்கு தற்போது சேர்ந்து வாழ விருப்பமில்லை. எனக்கு எதிர்மனுதாரர் ஜீவனாம்சம் கொடுக்க கடமைப்பட்டவர் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:-** இல்லை.

Witness (Sd)- Madhubala

Typed to my dictation in open court read over and explained to the witnesses in the presence of the accused and admitted by him to be correct.

Sd/. N.Eniya,
Judicial Magistrate No.II,
Sankari.

.